# உன் ஜெபம் கேட்கப்பட்டது. அப் 10 : 31

கிறிஸ்துவுக்குள் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**"உன் ஜெபம் கேட்கப்பட்டது"**

இதுவரையிலும் நீங்கள் விசுவாசத்தோடு ஜெபத்திலே கேட்டுக்கொண்டு வந்த காரியங்களை கர்த்தர் கேட்டார். ஆதலால், இந்த மாதத்தில் **"என் ஜெபம் கேட்கப்பட்டது"** என விசுவாசத்தோடே அறிக்கை செய்யுங்கள். ஒரு அற்புதத்தைக் காண்பீர்கள். நீங்கள் எதற்காக விசுவாசத்தோடே ஜெபித்து வந்தீர்களோ, அவைகளையெல்லாம் ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள்! வேலைக்காகவா, குழந்தைக்காகவா, பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை பெறவா, கடனிலிருந்து விடுதலை பெறவா ? இரட்சிப்புக்காகவா, அபிஷேகத்துக்காகவா, வரங்களுக்காகவா, முழு நேர ஊழியத்திற்காகவா, வெளிநாட்டு வேலைக்காகவா, சபையின் வளர்ச்சிக்காகவா, புது தொழில் ஆரம்பத்திற்காகவா, திருமணத்திற்காகவா, புது ஊழியம் ஆரம்பிக்கவா, வியாதியிலிருந்து விடுதலைக்காகவா, மன சமாதானத்திற்காகவா ?

எதற்காக ஜெபித்தீர்கள் ? . . சிந்தியுங்கள் !

**"உன் ஜெபம் கேட்கப்பட்டது"** ஆமென்.

**மத் 21 : 22** ல் **இயேசு** சொன்னார் : நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ, அவைகளையெல்லாம் பெறுவீர்கள்.''– என்பதாக.

**மத் 6 : 6** ல் **இயேசு** சொன்னார் : உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு – என்பதாக.

**மாற்கு 13 : 33** ல் **இயேசு** சொன்னார் : விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் – என்பதாக.

**மாற்கு 11 : 25** ல் **இயேசு** சொன்னார் : நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால் . . . அந்தக் குறையை மன்னியுங்கள் – என்பதாக.

கடைசியாக **லூக்கா 18 : 1** ல் **இயேசு** சொன்னார் : சோர்ந்துபோகாமல், எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும்'' என்பதாக.

என் அன்பு சகோதரனே, சகோதரியே, நமது இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து சொன்ன வசனங்களை சிந்தித்துப் பாருங்கள். அப்பொழுது உங்கள் ஜெபம் ஏன் கேட்கப்பட்டது என்று அறிந்துகொள்வீர்கள். கர்த்தரைத் துதிப்பதற்கு ஏதுகரமாக இருக்கும்.

முதலாவது, விசுவாசம் உங்களிடம் காணப்பட்டது. இரண்டாவது ஜெபத்திலே கேட்டீர்கள். மூன்றாவது அந்தரங்கத்தில் பிதாவை நோக்கிப் பார்த்தீர்கள். நான்காவது, அநேக நேரங்களில் விழித்திருந்து ஜெபித்தீர்கள். ஐந்தாவது, மற்றவர்கள் குறைகளை மன்னித்து ஜெபித்தீர்கள். ஆறாவதாக, ஸ்தோத்திரத்தோடே ஜெபித்தீர்கள். ஆதலால் தான் கர்த்தர் வாக்குத்தத்தமாக கீழ்க்கண்ட வசனத்தைத் தந்தார்.

''**உன் ஜெபம் கேட்கப்பட்டது**'' – என்பதாக. எத்தனை மகிழ்ச்சி. கர்த்தர் உன் விண்ணப்பத்தைக் கேட்டார். ஆதலால், ''என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே'' – என்று சொல்லுங்கள்.

ஏனெனில், அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார். கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயது போலாகிறது.

ஒடுக்கப்படுகிற யாவருக்கும் கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார். அல்லேலூயா!

என் அன்பு சகோதரனே, சகோதரியே

கீழ்க்கண்டபடி உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**மெய்யாய் தேவன் எனக்கு செவிகொடுத்தார்;**

**என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்.**

என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக – என்பதாக. ஆமென்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென்.

**"உன் ஜெபம் கேட்கப்பட்டது"**